செய்தி வெளியீடு எண். 138 நாள். 12.03.2018

**உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு (ம) தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் 194 பயனாளிகளுக்கு ரூ. 48 இலட்சத்தி 50 ஆயிரத்திற்கான மானியத்தை வழங்கினார்கள்**

இன்று (12.03.2018) திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக விளையாட்டு அரங்கத்தில், உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு (ம) தொல்லியல் துறை அமைச்சர் திரு.கபாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் 194 பயனாளிகளுக்கு ரூ. 48 இலட்சத்தி 50 ஆயிரத்திற்கான மானியத்தை வழங்கினார்கள்.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக உழைக்கும் மகளிருக்கான, அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் மூலம் தமிழக அரசு ஆண்டிற்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு இருசக்கர வாகனம் வாங்குவதற்கு 50 சதவிகிதம் மானியமாக ரூ. 25 ஆயிரம் வரை வழங்கி அரசாணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தினால் உழைக்கும் மகளிர் சுதந்திரமாகவும், குறித்த நேரத்தில் தங்கள் பணியிடங்களுக்கு சென்று வரவும், தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்லவும் தங்களது பணிகள் அனைத்தையும் செய்திட நம்முறை அரசு வழிகாட்டியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளைச் சேர்ந்த 10434 மகளிரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. இதன்படி அம்மா இருசக்கர வாகனத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் 1646 இருசக்கர வாகனங்களுக்க மானியம் வழங்கிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, 24.02.2018 -ல் சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் துணை முதல்வர் முன்னிலையில் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களால் 56 பயனாளிகளுக்கு மானியம் விடுவிக்கப்பட்டது. மேலும். தகுதியான விண்ணப்பதாரர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை நமது மாவட்டத்தில் செயல்படுத்தும் பொருட்டு, இன்று 194 உழைக்கும் மகளிருக்கு ரூ. 48 இலட்சத்தி 50 ஆயிரம் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கிறேன் என மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு (ம) தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது :

மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரில் வழங்கப்படும் 28-வது திட்டம் இதுவாகும். பெண்களுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பல சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறது. அந்த வகையில் பெண் கல்வி இடைநிற்றல் தடுக்க சைக்கிள் வழங்கும் திட்டம். மானிய விலையில் பெண்களுக்கு இருசக்கர வாகனங்கள் வழங்குவது போன்ற திட்டங்கள் சிறப்பான திட்டங்களாகும். இவைகள் அம்மா உணவகம் போன்று பெரும் சாதனைகளை படைக்கும். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசு பல்வேறு சலுகைகளை நடுத்தர மற்றும் பொருளாதார அளவில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு பல

சிறப்பு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. பெண்களுக்கு மகப்பேறு விடுப்பினை 9 மாதங்களாக உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்களே ஆகும்.

எனவே அம்மாவின் வழிநடக்கும் இந்த அரசு பெண்களை ஊக்கப்படுத்தி சாதனைகள் படைக்க செய்யும் அரசாக விளங்குகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

தமிழக அரசு பெண்களின் நலனிற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் குறிப்பிடும்படியாக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டமானது ரூ.12 ஆயிரம் மூன்று தவணையாக வழங்கப்படுகிறது. அது தற்போது ரூ 18 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படவுள்ளது. கல்வித்துறையில் பெண் கல்வி இடைநிற்றல் தடுக்க 14 வகையான உபகரணங்களை அரசு வழங்குகிறது. இதில் லேப்டாப் முதல் மிதிவண்டிகள் வரை வழங்கப்படுகிறது. மேலும், உழைக்கும் மகளிர்களுக்கு 25 சதவிகிதம் அல்லது ரூ. 25 ஆயிரம் மானியத்தில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்படுகிறது. திருவள்ளூர் மாவட்டத்திற்கு 1646 ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று முதல் தவணையாக 194 வாகனங்களுக்கான ஆணைகள் வழங்கப்படுகிறது. மேலும், பெண்களுக்கு கல்வி மற்றும் திருமண சுமைகளை குறைப்பதற்க தாலிக்கு தங்கம் அரசு வழங்குகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை 30,584 நபர்களுக்கு 118 கிலோ கிராம் தங்கம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களையும் தெரிந்துக்கொண்டு பயன்பெற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.கே.எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.ச.சா.குமார் மற்றும் திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் திருமதி.பா.கிருஷ்ணம்மாள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**